சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மின் நூலகம் (Digital Library) அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.04 நாள் 05.01.2018

திருவள்ளுவராண்டு, 2048
ஹேவிளம்பி வருடம், மார்கழி–21

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.6457/எ1/2017, நாள் 20.11.2017 மற்றும் 01.12.2017.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்கள்:–

> "அரிய நூல்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றை மின்மயமாக்கி அனைத்து நூலகங்களுக்கும் பொதுவான அட்டவணையினை (Universal Catalogue) உள்ளடக்கிய ஒரு நவீன மின்நூலகம் **(Digital Library)** அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி செலவிடப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக மேலே படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கருத்துருவில் கீழ்க்கண்டவாறு நான்கு இனங்களாக மேற்படி அறிவிப்பினை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டதில் இனம் (iii) பொது நூலக பட்டியல் தயாரித்தல் (Universal Catalogue) என்ற செயல்பாடு, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovation Initiatives) திட்டத்தின் மூலம் ஒரு கூறாக (One of the Component) செயல்படுத்தப்படவுள்ள நிலையில், அதற்கான திட்டமதிப்பீடு தொகையான ரூ.6,33,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம் மட்டும்) நீங்கலாக ஏனைய திட்ட செயல்பாடுகளுக்கு ரூ.1,93,67,000/–க்கு நிதி ஒப்பளிப்பும், அத்தொகையினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று செயல்படுத்த அனுமதியும் வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

(த.பி.பா)

| வ. எண் | இனங்கள் | செயல்கள் | மதிப்பீடு | தொகை |
|---|---|---|---|---|
| (i) | அரிய வகை நூல்கள், ஆவணங்கள் மற்றும் ஓலைச் சுவடிகளை மின்னுரு வாக்கம் செய்தல் | மின்னுருவாக்கம்<br>• Rare Books (A4 & A3 Size) = 20000 (40,00,000 pages) (1 book = 200 pages approximately)<br>• Rare Documents (A3 Size) = 100 (50,000 pages) (1 Document = 500 pages approximately)<br>• Palm-leaf Manuscript = 1,000 (5,00,000 leafs) (1 Bundle = 500 leafs approximately) | 99,57,500 | |
| | | தரம் சரிபார்த்தல் (Quality Checking) 20,000 rare books + 100 rare documents + 1,000 palm-leafs = 21,100 items (45,50,000 images | 22,75,000 | |
| | | Logistic for bringing document to Regional centres | 6,84,500 | ரூ.1,29,17,000 |
| (ii) | மீத்தரவு தயாரித்தல் (Mata data preparation) | மின்னுருவாக்கம் செய்யப்பட்ட அனைத்து அரியவகையான நூல்கள், ஆவணங்கள் மற்றும் ஓலைச்சுவடிகள், அதற்குண்டான விவரங்களுடன் சர்வதேச தரத்தின் அடிப்படையில் மீத்தரவுகள்தயாரித்தல். (21,100 items) | | ரூ.21,10,000 |
| (iii) | பொது நூற்பட்டியல் தயாரித்தல் (Universal Catalogue)-Cataloguing | அனைத்து அரியவகையான நூல்கள், ஆவணங்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் முதலியவற்றிற்கு Marc 21 அடிப்படையில் பொதுவான நூற்பட்டியல் (Universal Catalogue) தயாரித்தல். (21,100 items) | | ரூ.6,33,000 |
| (iv) | மின்னூலகம் உருவாக்குதல் (Digital Library). | Open source Software Customization | 50,000 | |
| | | Programme Coding for Duplicate Checking | 50,000 | |
| | | Server (9 TB, 35 GB Ram) | 7,00,000 | |
| | | Portable Hard Disk (2 TB x 40 Nos) | 2,40,000 | |
| | | SAN 40 TB | 30,00,000 | |
| | | Technical LAN / Net Work | 3,00,000 | ரூ.43,40,000 |
| | மொத்தம் | | | ரூ.2,00,00,000 |

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று பள்ளிக்கல்வித் துறையின் 2017–18–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட மின் நூலகம் அமைப்பதற்கான அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக ரூ.1,93,67,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்து ஏழாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் அச்செலவினத்தை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று செயல்படுத்தவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.67195/கல்வி–II/2017, நாள் 04.01.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்
05/01/18